**STC 10/2021** Dt: 19.09.2024

புகார்தாரர் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.2012/2024 Dt–24.06.2024ம் தேதி அனுமதிக்கப்பட்டு பு.தா.சா.1 கூடுதல் முதல்விசாரணை செய்யப்பட்டு எதிரி தரப்பில் தற்போது குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of September 2024.

19.09.2024

பு.தா.சா.1–மோகன்தாஸ்
(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) இராமநாதபுரம் சார்ஆட்சியரிடம் எதிரி தாக்கல் செய்த கந்துவட்டி சம்மந்தமாக புகாரை விசாரித்த சார்ஆட்சியர் மோகன்தாஸ் என்பவருக்கு 02.07.2020, 02.08.2020, 02.09.2020 மற்றும் 02.10.2020 ஆகிய தேதிகளில் நான்கு தவணைகளாக ரூ.64,250/– செலுத்த சார்ஆட்சியர் உத்தரவிட்டாரா என்றால் ஆமாம். இந்த வழக்கில் எதிரி மீது பணமோசடி செய்ததாக எந்த காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் இராமநாதபுரம் மாவட்ட துணைக்கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன்.

2) இராமநாதபுரத்தில் நான் மிளகாய் கமிஷன் கடை வைத்துள்ளதால் இராமநாதபுரம் மாவட்ட துணைக்கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். இவ்வழக்கின் எதிரி என்மீது கந்துவட்டி புகார் சாட்சிஆட்சியரிடம் எப்போது கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் நினைவில் இல்லை. நான் இராமநாதபுரம் மாவட்ட துணைக்கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாருக்கு பின்பு தான் எதிரி சார்ஆட்சியரிடம் புகார் கொடுத்தார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பாரா 3ல் 02.06.2020ம் தேதி தான்

எதிரி மீது நான் இராமநாதபுரம் மாவட்ட துணைக்கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் வாக்குமூலத்தில் சார்ஆட்சியர் உத்தரவானது 28.02.2020 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தற்போது நினைவில் இல்லை.

3) இராமநாதபுரம் மாவட்ட துணைக்கண்காணிப்பாளர் கொடுத்த உத்தரவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புதசாஆ.7 ஆவணம் வழக்கிற்காக பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் தான் வழக்கு விசாரணையின்போது தாக்கல் செய்யாமல் பின்பு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சார்ஆட்சியர் எதிரியை பணம் கொடுக்க சொல்லி எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கவில்லையென்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.